Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. STC. No. 453 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.8**

| | | | |
|---|---|---|---|
| Name: | மஞ்சுநாதன் | Calling: | உதவி ஆய்வாளர் |
| Father's Name: | கண்ணன் | Religion: | இந்து |
| Village: | ஊட்டமலை | Age: | 33 |
| Taluk: | பென்னகரம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 26.02.2026

(எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா.8 முதன்மை விசாரணை

நான் தற்போது திருப்பத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றிவருகிறேன். (இவ்வழக்கில் மோட்டார் வாகன ஆய்வறிக்கை வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.வெங்கட்ராகவன் என்பவருக்காகவும், அ.சா.1க்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.நதிம் அகமது என்பவருக்காகவும் சேர்த்து சாட்சியமளிக்கவும் வல்லுநர்களின் கருத்துரைகளை இந்த சாட்சியம் மூலம் ஆவணங்களாக குறியீடு செய்யவும் கற்றறிந்த எதிரியின் தரப்பின் வழக்கறிஞர் எவ்வித ஆட்சேபனை இல்லை என் தெரிவித்தார்.) கடந்த 15.12.2023ம் தேதி 20.00 மணிக்கு வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த விபத்து தகவலை பெற்று அங்கு சென்று பார்த்தபோது விபத்தில் காயம்பட்ட

சேகர் மேல்சிகிச்சைக்காக சென்னை ராமச்சந்திரா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக தெரிந்து கொண்டேன். 16.12.2023ம் தேதி காலை 06.00 மணிக்கு மேற்படி மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அங்கும் காயம்பட்ட சேகர் மயக்க நிலையில் இருந்தார். அவருடன் இருந்த அவரது மனைவி இளவரசி என்பவரை விசாரித்து புகார்வாக்குமூலம் பதிவு செய்தேன். 13.00 மணிக்கு நிலையம் சேர்ந்து அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 554–2023 சட்ட பிரிவுகள் 279. 337 இதச முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தார். புகார் வாக்கு மூலம் ஏற்கனவே அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அந்த வழக்கினை நானே விசாரணைக்கு எடுத்துகொண்டு அதே நாள் 14.00 மணிக்கு சம்பவ இடமான நெக்குந்தி மார்பிள் ஷோரூம் அருகே சென்று சாட்சிகள் அருண்குமார் மற்றும் நாகநாதன் என்பவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் ஏற்கனவே அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **மாதிரி வரைபடம் அசாஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

பின்பு சாட்சிகள் இளவரசி, சேகர், கிங்ஸ்லி, அருள்தாஸ், ரமேஷ்பாபு மற்றும் மகசர் சாட்சிகள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் விபத்து ஏற்படுத்திய ஏபி 05 சிஜீ 2358 என்ற இன்னோவா காரை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்து ஆய்விற்கு பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. வெங்கட் ராகவன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றேன். **வாகனங்கத்தின் ஆய்வறிக்கை அசாஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 22,12,2023ம் தேதி 11.00 இவ்விபத்தை ஏற்படுத்திய எதிரி ஹரிஷ்பாபு என்பவரை நிலையம் ஆஜரானவரை காரணம் கூறி கைது செய்தும் தக்க இருநபர் ஜாமினில் விடுவித்தேன். பின் காயம்பட்ட வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.நதீம் அகமது என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் கொடுங்காயம் என அளித்த காயச்சான்றிதழை பெற்றேன். **சேகரின் காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மருத்துவர் கொடுங்காயம் என சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை**

279, 337 இதச என்பதிலிருந்து 279. 338 இதச என மாற்றி பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து சம்பவம் நிகழ்ந்தது உண்மை என தெரிந்ததால் எதிரி மணிகண்டன் மீது 279, 338 இதசவாக இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் குவிமுச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் உள்ளதை போல் சொன்னார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

முதல் தகவல் அறிக்கையில் புகார்வாக்குமூலம் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் பெற்றதாக உள்ள நிலையில் புகார் வாக்குமூலம் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் பெறப்பட்டதா என்றால் இல்லை, ராமச்சந்திரா மருத்துவமனையில் பெறப்பட்டது. விபத்து நடந்த பகுதிக்கு முன்பு ஒரு டோல்பிளாசா உள்ளது என்றால் சரிதான். டோல்பிளாசாவிற்கும், விபத்து நடந்த இடத்திற்கும் இடையில் 20, 30 மீட்டர் இடைவெளி இருக்கும் என்றால் இல்லை, அதிகமாக இருக்கும். எந்த ஒரு வாகனமும் டோல்பிளாசாவில் பணம் கட்டிவிட்டு தான் வெளியே வரமுடியும் என்றால் சரிதான். டோல்பிளாசாவை தாண்டி 20, 30 மீட்டர் இடைவெளியில் வண்டி வேகமாக வர வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்தது சென்டர் மீடீயேட்டர் அருகே என்றால் சரிதான். அங்கு சாலையை கடப்பதற்கோ, வளைவதற்கோ எந்த ஒரு குறியீடும் இல்லை என்றால் சரிதான். சாலையை கடக்க கூடாத இடத்தில் கடந்தால் சட்டத்திற்கு முரணானது என்றால் பொதுமக்களின் அறிவைப்பொறுத்து. விபத்துநடந்த இடத்தில் இருபுறமும் சாலை தடுப்பு கம்பி உள்ளது என்றால் இல்லை, மையப்பகுதியில் மட்டும் தான் உள்ளது. வண்டி பழுதாகி நின்றது என்று கூறியுள்ள நிலையில் என்ன பழுதானது என்று தெரிந்து கொண்டேனா என்றால் அவருக்கே தெரியவில்லை. சேகர் என்ன வேலை செய்கிறார் என்றால் கீரை வியாபாரம் செய்கிறார். உடன் சென்ற அ.சா.3 கிங்ஸ்லி கார் ஒர்க்ஷாப் வைத்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். விபத்து முழுக்க முழுக்க சேகரின் அஜாக்கிரதையால் நடந்தது என்றால் சரியல்ல. சேகர் அவரது நீதிமன்ற சாட்சியத்தில் தான் திடீரென கீழே இறங்கியதால் தான் விபத்து ஏற்பட்டது என கூறியுள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.2ம் மேற்படி சேகர் கூறியதை தான் கூறியுள்ளார் என்றால் அதை பற்றி தெரியாது. அ.சா.3 விபத்து யாருடைய

அஜாக்கிரதையால் நடந்தது என்று தெரியாது என கூறியுள்ளார் என்றால் சரியல்ல. மற்ற சாட்சிகள் வழக்கு விவரம் தெரியாது என கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. விபத்து முழுக்க முழுக்க சேகரின் அஜாக்கிரதையால் நடந்தது என்றாலும், சாலையை கடக்க கூடாத இடத்தில் நடந்தது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) மஞ்சுநாதன்

SRIPATHI K Digitally signed by SRIPATHI K